<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

<u>அசல் வழக்கு எண்.110/2023</u>

**2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 15–ம் நாள் வெள்ளிக் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திருமதி. P. தேன்மொழி, உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : கலியன் | வட்டம் | : வேப்பந்தட்டை |
| கிராமம் | : பாண்டகபாடி | சமயம் | : |
| சாதி | : | வயது | : 47/2024 |

**முதல் விசாரணை :**

1 (i) நான் இவ்வழக்கில் வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். 04.02.1986 ம் தேதியிட்ட தாவா சொத்தை எனது தந்தை கிரைய பெற்றதற்கான கிரையபத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்கு எனது தந்தை பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 09.12.2023 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு எனது தந்தை பெயரில் ஏற்பட்ட பட்டா எண்.81–ற்குரிய கணினி மூலம் தரவிறக்கம் செய்யப்பட்ட பட்டாவின் நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

(ii) எனது தந்தையின் இறப்பு சான்றிதழின் கணினி மூலம் பெறப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 17.11.2023 ம் தேதியிட்ட எனது தகப்பனார் கலியனுக்குரிய வாரிசு சான்றிதழின் கணினி மூலம் பெறப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா சொத்திற்கு 01.11.1975 முதல் 16.11.2023 ம் தேதி வரை இணைய மூலம் பெறப்பட்ட வில்லங்க சான்றிதழின் நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 12.12.1986 ம் தேதியிட்ட தாவா சொத்தின் பேரில் பிறப்பிக்கப்பட்ட மோசடி பத்திரத்தின் இணைய மூலம் பெறப்பட்ட சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.7** ஆக குறியீடு

செய்யப்படுகிறது.) 2011.2023 ம் தேதியிட்டு மாவட்ட பதிவாளர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட அ.தி.மு.எண்.3648/உ/2023 உத்தரவின் எனக்கு சார்வு செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவாபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

பிரதிவாதிகள் தரப்பில் தோன்றா தரப்பினர் ஆகி விட்டதால், எனவே குறுக்கு விசாரணை இல்லை.